DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.474/2023**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | சூசை மைக்கேல்ராஜ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சாமிக்கண்ணு |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கல்லல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.04.2020 ம் தேதி நானும் சா்ர்பு ஆய்வாளர் திரு.செந்தில்குமார், முதல் நிலைக்காவலர் வீரபாண்டியன், முதல் நிலைக்காவலர் ரமேஷ் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக உஞ்சனை நரசிம்மபுரம் அருகே ரோந்து சென்றபோது தொலைபேசியின் பேரில் கிடைத்த இரகசிய தகவலின்பேரில் ஆய்வாளருடன் சென்று மாலை 17.00 மணிக்கு கடை எண்.7603 அரசு மதுபான கடையை சுற்றி பார்த்தபோது கடை பூட்டியிருந்தது. கடையின் பின்புறம் அரசு மதுபான கடையில்

விற்பனை செய்யும் மதுபானங்களான பல்வேறு வகை மதுபாட்டில்கள் சுமார் 741 பாட்டில்கள் பெட்டியுடன் இருந்தது. 741 பாட்டில்களை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரிகளையும் அவர்களிடம் கைப்பற்றிய மதுபாட்டில்களை காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எந்த தேதியில் எத்தனை மணிக்கு அரசு மதுபான கடைக்கு சென்றேன் என்றால் 24.04.2020 ம் தேதி மாலை 5.00 மணிக்கு சென்றோம். நாங்கள் அனைவரும் ஒரே காரில்தான் சென்றோம். பின்பு எத்தனை மணிக்கு காவ்ல நிலையம் திரும்ப கைப்பற்றிய பொருட்களுடன் திரும்ப வந்தோம் என்றால் மாலை 6.00-6.30 மணியளவில் வந்தோம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் மதுபான கடை அருகே சம்பவ சமயத்தில் வீடுகள் இருந்ததா என்றால் ஆமாம், தள்ளி தள்ளி வீடுகள் இருந்தது. அத்தாட்சியை ஆய்வாளர் அந்தோணிசெல்லதுரை தயார் செய்தார். எந்த வகையான மதுபாட்டில்கள் எத்தனை இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் நிறைய இருந்ததால் ஞாபகமில்லை. நாங்கள் சென்ற வாகனத்திலேயே மதுபாட்டில்களை ஏற்றி காவல் நிலையம் கொண்டு வந்தோமா என்றால் ஆமாம். 17.15 மணிக்கு மதுபாட்டில்களை மட்டும் அனுப்பிவிட்டு அதன்பின்பு எதிரிகளுடன் நாங்கள் காவல் நிலையம் சென்றதாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறா என்றால்

ஆமாம். நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்றும் 741 பாட்டில்களை வாகனத்தில் வைத்து எடுத்து வர வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அத்தாட்சியை எங்கு வைத்து தயார் செய்தோம் என்றால் கடைக்குப் பின்னால் உள்ள பாரில் வைத்து தயார் செய்தோம். நான் நேரடியாக சம்பத்திற்கு போகவில்லை என்றும் மதுபாட்டில்களை கைப்பற்றும்போது நான் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.